

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.12.2023) தலைமைச் செயலகத்தில், லயன் டேட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பொன்னுதுரை, இயக்குநர் திருமதி பி.அபிநயா ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மேற்கு ஒன்றிய தி.மு.க இளைஞர் அணி சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற தொடர் கிரிக்கெட் போட்டியில் வெற்றிப்பெற்ற அணிக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. பரிசுகளை வழங்கி வாழ்த்தினார். உடன் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் இளையராஜா, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், ஒன்றியச் செயலாளர் எஸ்.கே.முத்துச்செல்வம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.கே.எம்.ராஜா மற்றும் சார்பு அணியின் நிர்வாகிகள் கே. கே.எஸ்.ராஜா, சிவக்குமார், வசந்த்ராஜ், பிரேம் குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# எழும்பூர் 61(அ) வட்டத்தில் 1000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வழங்கினார்!

சென்னை, டிச.13-

எழும்பூர் தொகுதி, 61 (அ) வட்டத்தைச் சேர்ந்த 1,000 குடும்பங்களுக்கு எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், கழக அமைப்புச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற மேலவை உறுப்பினருமான ஆர்.எஸ்.பாரதி நிவாரண உதவிகளை வழங்கினார்.

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் நேரில் சென்று மீட்புநிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க, எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும், தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ. பரந்தாமன், இன்று எட்டாவது நாளாக, எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 61 (அ) வட்டத்திலுள்ள டிரான்ஸ் போர்ட் லேன், வேலாயுதம் 1, 2, 3 மற்றும் 4வது சந்து, கொய்யாதோப்பு தெரு, ஜமால் முஹைதீன் தெரு, காஜா மொய்தீன் தெரு, அப்துல் உசேன் தெரு மற்றும் அப்துல் சுக்ருர் தெரு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொது மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கிடும் வகையில், அவரது ஏற்பாட்டில், தி.மு. கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற மேலவை உறுப்பினருமான ஆர்.எஸ்.பாரதி, 1,000 பெட்ஷீட், 1,000 புடவை, 1,000 கைலி மற்றும் தலா 5 கிலோ கொண்ட 1,000 அரிசிப் பை ஆகிய நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் பகுதிப் பொருளாளர் ந.கலையரசன், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர். புருஷோத்தமன், அவைத் தலைவர் வெ.மருதன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் ரா. வெற்றிவேல், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்பரசன், 108 (அ) வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 58 (அ) வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எல். சுகுமாரன், பகுதிப் பிரதிநிதி இளஞ்செழியன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் யு.விஜய போஸ், எழும்பூர் சி.ரமேஷ், கி.புஷ்ப ராஜ், பிரம்மதேவன், பாலாஜி அன்புமணி, சுனேஷ், அமீர்கான், யுவராஜ், அசினா பேகம், கவிதா உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், முன்னோடிகளும் கலந்து கொண்டனர்.

### ‘மிக்ஜாம்’ புயலால் ஏற்பட்ட

# வெள்ள பாதிப்புகள் குறித்து அவசரக் கூட்டம்!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை,டிச.13-

“மிக்ஜாம்” புயலால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகள் குறித்தான அவசர ஆய்வுக் கூட்டம் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைமைச் செயலகத்தில் “மிக்ஜாம்” புயலால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகள் குறித்தான அவசர ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (11.12.2023) நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்வாய்வு கூட்டத்தில் சென்னை, செங்கற்பட்டு, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள நீர்வளத்துறையால் பராமரிக்கப்படும் செம்பரம்பாக்கம், செங்குன்றம் , சோழவரம் , பூண்டி மற்றும் பிற ஏரிகளிலும் , அடையாறு ஆறு ,கூவம் ஆறு, கொசஸ்தலை ஆறு, பக்கிங்காம் கால்வாய் மற்றும் பிற நீர் வழித்தடங்களில் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்புகள் குறித்து கேட்டறிந்ததோடு, 11.12.2023 முதல் 13.12.2023 வரை புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த ஆய்வு மேற்கொள்ள வருகை புரிந்துள்ள மத்திய குழு வல்லுநர்களிடம் விரிவான விவரங்களை சமர்ப்பிக்கும்படி நீர்வளத்துறை உயர் அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

மேலும் 2024-2025-ம் ஆண்டு நீர்வளத்துறை மூலம் மேற்கொள்ளப்படவுள்ள முக்கிய வரைவுத்திட்டங்களுக்கான தேவைப்படும் நிதியினை முன்மொழிவதற்கும், நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் நீர்வளத்துறை உயர்அதிகாரிகள் மற்றும் பொறியாளர்களுடன் கலந்தாலோசித்தார்

இக்கூட்டத்தில் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா நீர்வளத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் ஏ.முத்தையா, தலைமை பொறியாளர் சென்னை மண்டலம் கு.அசோகன் , தலைமை பொறியாளர் திட்ட உருவாக்கம் க.பொன்ராஜ் , மற்றும் நீர்வளத்துறை பொறியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மிக்ஜாம் புயல்: சான்றிதழ்களை இழந்த மாணவர்கள் சான்றிதழ் பெற புதிய இணைய தளம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, டிச.13-

“மிக்ஜாம் புயல், வெள்ள பாதிப்பினால் கல்லூரிச் சான்றிதழ்களை இழந்த மாணவ / மாணவிகளுக்கு கட்டணமின்றி அவற்றின் நகல்களைப் பெற இணையதள உருவாக்கம்” என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து அரசின் செய்தி வெளியீடு வருமாறு:-

தமிழ்நாட்டில் “மிக்ஜாம்” புயல் காரணமாக சென்னை மாவட்டத்திலும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் வரலாறு காணாத மழைப்பொழிவு ஏற்பட்டு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மழை, வெள்ள பாதிப்பினால், கல்லூரி மற்றும் பல்கலைக்கழகச் சான்றிதழ்களை இழந்த மாணவ / மாணவிகள் தங்கள் சான்றிதழ்களின் நகல்களை கட்டணமின்றி பெறுவதற்கு ஏதுவாக www.mycertificates.in என்ற இணையதளம் உயர் கல்வி துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவ மாணவிகள் தங்களின் இழந்த சான்றிதழ் பற்றிய விபரங்களை மேற்கண்ட இணையதள வாயிலாக இன்றிலிருந்து பதிவு செய்யலாம்.

மாணவ / மாணவிகள் மேற்கண்ட இணையதள வாயிலாக சான்றிதழ்களின் விபரங்களை பதிவு செய்த பின் அவர்களது மின்னஞ்சலுக்கு ஒப்புகை (Acknowledgement) அனுப்பப்படும்.

அவ்வாறு பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்களின் நகல்கள், கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்டு, மாணவர்களுக்கு சென்னையில் வழங்கப்படும்.

மேலும், இணையதளத்தில் பதிவு செய்வது குறித்த சந்தேகங்களுக்கு தெளிவு பெற தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தில் செயல்படும் கட்டணமில்லா அழைப்பு மையத்தை 1800-425-0110 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

# கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்ற வேண்டும்!

## மக்களவையில் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி வலியுறுத்தினார்!

புதுடெல்லி,டிச.13-

மக்களவியல் கழக உறுப்பினர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி பேசுகையில் கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்றவேண்டும் என்று வலியுறுத்தினார். இது குறித்து அவர் பேசியது வருமாறு:-

கல்வியும் மருத்துவமும் தன் இரண்டு கண்களாக பாவித்து திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பாக இந்த பழங்குடி மற்றும் மலைவாழ் மக்கள் உயர் கல்வி பல்கலைக்கழக சட்ட மசோதாவை நான் மனதார வரவேற்கிறேன். இந்த கல்வி ஒன்று தான் நம்மிடமிருந்து பிரிக்க முடியாத சொத்து. அனைவருக்கும் கல்வி, அதுவும் தரமான கல்வி கிடைத்திட வேண்டும் என்பதுதான் தந்தை பெரியாரால் ஆரம்பித்து பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் அவர்களின் வழியே திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார் எங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அதனால் தான் தொடக்க பள்ளியிலேயே மாணவர்கள் எல்லாம் தரமான கல்வி பெற வேண்டும் என்பதற்காக காலை உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அது மட்டுமல்ல பெண்கள் உயர்கல்வி படிக்க வேண்டுமென்பதற்காக மாதம் 1000 ரூபாய் வழங்கும் திட்டங்களை அறிவித்து மிக சிறப்பாக கல்வியில் முன்னேறிய ஒரு மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிக் கொண்டிருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இதுபோல பல்கலைக் கழகங்கள் இந்தியாவிலேயே தொடங்கப்படுவதை அவர் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம். வெறும் பல்கலைக்கழகங்களை தொடங்குவது எண்ணிக்கையில் மட்டுமல்லாமல் தரத்திலும் சிறந்த பல்கலைக்கழகமாக அது இருந்திட வேண்டும் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோள். ஏனென்றால் கிட்டத்தட்ட 1000க்கும் மேற்பட்ட பல்கலைக் கழக இந்தியாவில் இருந்தாலும், ஆனால் உலக தரம் பட்டியலில் நாம் அந்த பல்கலைக்கழக எண்ணிக்கையிலேயே 300க்கு மேல்தான் நம் இந்திய பல்கலைக்கழகங்கள் வருகிறது என்றால் நம்முடைய தரத்தை நாம் ஆய்வு செய்திட இது ஒரு முக்கியமான தருணமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.



அதேபோல்தான் GER என்கிற (Gross Enrollment Ratio) உயர் கல்வி படித்தவரின் எண்ணிக்கை இந்தியாவிலேயே வெறும் 27சதவீதம் தான் இருக்கிறது. ஆனால் எங்கள் தமிழ்நாட்டில் அந்த உயர்கல்வி GER ratio கிட்டத்தட்ட 47 சதவீதத்துக்கு மேல் என்றால் இதற்கெல்லாம் காரணம், தொடக்கப்பள்ளியிலிருந்து எங்களுடைய திராவிட மாடல் அரசாங்கம் கவனம் செலுத்தி கொண்டிருப்பதால் தான். எப்படி உண்ண உணவு, இருக்க இடம், உடுக்க உடை அவசியமோ, அதேபோல் ஒவ்வொரு மனிதனுக்கும் கல்வி அதன் தொடக்க கல்வி எவ்வளவு அவசியம் என்பதை உணர்ந்ததால் தான் இது போல இந்த GER கிட்டத்தட்ட தமிழகம் 47% எடுத்து இப்போது முன்னோடி மாநிலமாக இருக்கிறது. இதை நான் பெருமையாக இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த அரசாங்கம் மிக முக்கியமான கவனம் செலுத்த வேண்டிய ஒரு நிகழ்வாக ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளில் 19,000 எஸ் சி, எஸ் டி, ஓ பி சி, மாணவர்கள் ஒன்றிய பல்கலைக்கழகங்களில் இருந்து தங்களது படிப்பை தொடர முடியாமல் விட்டுச் சென்றிருக்கிறார்கள். அது மட்டுமல்ல அதில் 2622 மாணவர்கள் பழங்குடியின மாணவர்கள். கிட்டத்தட்ட 35க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்களுடைய உயிரை மாய்த்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலேயே சென்னையில் இருக்கிற ஐஐடிலயே அவ்வப்போழுது இதுபோல பல நிகழ்வுகள், மாணவர்கள் உயிரை மாய்த்துக் கொள்கிற பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக் கிறது. இதுக்கெல்லாம் காரணம் அங்கே ஜாதியை வைத்துக்கொண்டு ஏற்றத்தாழ்வுகளால் அங்கே இருக்கிற பேராசிரியர்லால் அவருக்கு இதெல்லாம் நடைபெறுகிறது என்று பலமுறை எடுத்துச் சொல்லியும், இந்த அவையிலேயே பல முறை இதற்கான முறையிட்டு இருக்கிறோம். ஆனால் இது வரை எந்த ஒரு பெரிய பலனும் இதுவரை கிடைக்கவில்லை. அதனால், அதையும் இந்த நேரத்துல இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். தரமான கல்வி அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று அனைவரும் சேர்ந்து பாடுபட வேண்டும்.

இந்த கல்வி மத்திய பட்டியலில் இருந்து மாநில பட்டியலுக்கு மாற்றினால் தான் அனைத்து பகுதி மக்களும் அதாவது, தாழ்த்தப்பட்ட மக்களிருந்து,பிற்படுத்தப்பட்ட மக்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் அனைவருக்கும் கல்வி போய் சேர வேண்டும் என்றால் இது கண்டிப்பாக மாநிலப்பட்டியலுக்கு இந்த கல்வியை மாற்ற வேண்டும் என்ற ஒரு முக்கியமான கோரிக்கையாக வைக்கிறேன்.

அதேபோல அனைவருக்கும் தெரியும்

நீட் தேர்வால் இது வரை 40க்கும் மேற்பட்ட மாணவர்கள். தமிழகத்திலேயே உயிரை மாய்த்திருக்கிறார்கள். இது தமிழ்நாட்டிற்கு மட்டு மான பிரச்சனை அல்ல. ராஜஸ்தான் மாநிலத்தில் கோட்டா மாவட்டத்தில் இதுவரை 20க்கும் மேற்பட்ட மாணவர்கள் இறந்திருக்கிறார்கள். இவர்களெல்லாம் இது போல தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தான் இவர்களெல்லாம் உயர்கல்வி படிக்க வரும் பொழுது இதுபோல அவர்களின் தரத்தை சோதிப்பதற்காக தேர்வுகளை

வைத்தி அவர்களை உயர்கல்வி படிப்பதற்கு தடுப்புதனால் அவர்கள் மன உளைச்சலில் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இதையெல்லாம் தடுக்க வேண்டும் என்றால் இதுபோல நுழைவுத் தேர்வுகளையும் ரத்து செய்ய வேண்டும். அப்போது தான் தாழ்த்தப்பட்ட மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் உயர் கல்வி பெறுவார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் வலியுறுத்துகிறேன்.

என கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி எம்.பி. அவர்கள் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்

இவ்வாறு அவர் பேசினார்.



கும்பகோணம் தொகுதி, வாளாபுரம் ஊராட்சியில், தஞ்சாவூர் மாவட்டம், வேளாண்மை உழவர் நலத்துறை மற்றும் தோட்டக்கலை சார்பாக, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், 300 குடும்பங்களுக்கு, தலா 2 என 600 தென்னங்கன்றுகளையும், 50 சதவிகித மானியத்துடன் கூடிய விசை தெளிப்பான்களை 5 பயனாளிகளுக்கும், பழக்கன்றுகள் உள்ளடங்கிய தொகுப்புகளை 50 பயனாளிகளுக்கும் வழங்கினார்கள். நிகழ்ச்சியில், கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவர் தி.கணேசன், கும்பகோணம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெ.சுதாகர், கும்பகோணம் அட்மா குழுத் தலைவர் ஆலமன்குறிச்சி ஆர்.குமார், ஊராட்சி மன்ற தலைவர் சுமதி சுந்தரமூர்த்தி, ஒன்றிய அவைத்தலைவர் எல்.செல்வராஜ், பகுதி கழக செயலாளர் வி.வி.நடராஜன், தேவனாஞ்சேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் ராஜா (எ) பிரவின்ராஜ், கும்பகோணம் வேளாண்மை அலுவலர் அசோக்ராஜ், துணை வேளாண்மை அலுவலர் சாரதி, உதவி வேளாண்மை அலுவலர் துர்க்காதேவி, தோட்டக்கலை அலுவலர் அருள் தினேஷ் மற்றும் தி.மு.க. கிளை நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கொளத்தூர், துறைமுகம், எழும்பூர், திரு.வி.க.நகர் தொகுதிகளில்

# கனமழையால் பாதிக்கப்பட்ட 12,000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, டிச.13-

முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, நேற்று முன்தினம் (11.12.2023) இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட எழும்பூர் சட்டமன்ற தொகுதியில் 2,000 குடும்பங்களுக்கும், துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் 5,000 குடும்பங்களுக்கும், திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதியில் 2,000 குடும்பங்களுக்கும், கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் 2,000 குடும்பங்களுக்கும் நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவித்தொகையினை வழங்கினார்.

மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உணவு மற்றும் நிவாரண உதவிகள் வழங்குதல், நோய்தொற்று பரவாமல் தடுக்க மருத்துவ முகாம்கள் அமைத்தல் போன்ற பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (11.12.2023), சென்னை, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி, 99வது வார்டு, மெக்நிக்கல் சாலை, சர்வோதயா காப்பகத்தில் உள்ள பெண்களுக்கும், புதிய பூபதி நகர், ஓசங்குளம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு ஆகிய பகுதிகளில் வசிக்கும் 3,000 குடும்பங்களுக்கும், திருநங்கைகள் காப்பகத்தில் உள்ள திருநங்கைகளுக்கும், நிவாரணப் பொருட்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி 59-வது வார்டை சேர்ந்த டி.என்பி.எஸ்.சி சாலை, நாராயணப்பா சாலை, என்.எஸ்.சி.போஸ் சாலை, தேவராஜ் முதலியார் தெரு, மெமோரியல் ஹால் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட 4,000 குடும்பங்களுக்கும், மாநகராட்சி 60 வது வார்டை சேர்ந்த பிராட்வே, ஜாபர் ஜெராங் தெருவில் வசிக்கும் 1,000 குடும்பங்களுக்கும் நிவாரணப் பொருட்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்கினார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட மாநகராட்சி வார்டு எண் 74-ஐ சேர்ந்த 1,000 குடும்பங்களுக்கும், வார்டு எண் 71-ஐ சேர்ந்த 1,000 குடும்பங்களுக்கும், கொளத்தூர் சட்டமன்ற தொகுதி, மாநகராட்சி வார்டு எண் 66-ஐ சேர்ந்த வெற்றிநகர் பகுதியில் 1,000 குடும்பங்களுக்கும், வார்டு எண் 69-ஐ சேர்ந்த அகரம் பகுதியில் 1,000 குடும்பங்களுக்கும் நிவாரணப் பொருட்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே. எஸ்.இரவிச்சந்திரன், மண்டலக் குழுத்தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் இளம்சுருதி, திருமதி ராஜேஸ்வரி ஸ்ரீதர், சுந்தர் ராஜன், பரிமளம், திருமதி புனிதவதி, நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாநகராட்சியில் பகுதி சபை கூட்டங்கள் 1வது மண்டலம் சார்பில் மண்டல தலைவர் ப.க.பழனிசாமி தலைமையில் நடைப்பெற்றது. கூட்டத்தில் பொதுமக்கள் குறைகள் அடங்கிய கோரிக்கை மனுக்களை மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியிடம் வழங்கினார்கள். மனுக்களைப் பெற்று கொண்ட மேயர் குறைகளை தீர்ப்பதாக உறுதியளித்தார். அதேபோல் மண்டலம் 2 வார்டு 21 அம்பேத்கர் நகரில் நடைபெற்ற பகுதி சபை கூட்டம் துணை மேயர் வி.செல்வராஜ் தலைமையில் மண்டல தலைவர் காட்டு சுப்பு (எ) சுப்பிரமணியம் முன்னிலையில் பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை அளித்தனர். நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் ஜெகநாதன், மாநகராட்சி பொறியாளர் விஜயகுமார், உதவி பொறியாளர் பாஸ்கர், கழக நிர்வாகிகள் இரா.சேகரன், வனஜாதேவி எவரெஸ்ட் கணேசன், எஸ்.பி.வினோத், வழக்கறிஞர் விஜயகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.